**சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திற்கான - 2019**

-------------------------------------------------------------------------------------------------------------------

சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 5915–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், அப்போதைய நிதி அமைச்சும் தற்போதைய நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராகும். இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட மூலதனம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. சேயற்திட்டச் செயற்பாடுகள் 03 கூறுகளைக் கொண்டிருந்ததுடன் செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேட்டின் 4.2.3 ஆம் பந்தியின் படி, செயற்திட்டக் கூறுகளின் செயற்திறன் குறித்தான அபிப்பிராய அறிக்கை ஒன்று வேறாக வழங்கப்பட வேண்டும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 75 மில்லியனிற்கு சமமான ரூபா 11,212 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

-----------------

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் செலவினக் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 757 | ரூபா 14.26 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்களிற்கு மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு மற்றும் பிரதேச செயலகங்களில் அத்தகைய சொத்துக்கள் உள்ளமை தொடர்பில் கணக்காய்வில் சரிபார்க்க முடியாதிருந்தது. | மெய்மையாய்வு நிதி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அறிக்கை 2020 பெப்ரவரி 13 ஆம் திகதி வருடாந்தக் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ஆதனங்கள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்களின் உள்ளபடி நிலையை உறுதிப்படுத்துவதற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 03 கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக,

(அ) ஒருங்கிணைந்த சமூக பதிவேட்டை உருவாக்குதயாரித்தல்.

(ஆ) ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமைகளை அறிமுகப்படுத்தல் மற்றும்

(இ) செயற்திட்ட அமுலாக்கல், கண்காணிப்பு மற்றும் திட்டமிடலிற்கு உதவுதல்.

கிடைக்கப்பெற்ற தகவலின் படி, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| இல. | கூறு | செயற்பாடு | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| ------- | ------- | ------------ | ------------------------------ | ----------- | ---------------------- | ------------- |
| (i) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றைத் தயாரித்தல் | நலன்புரி நலனோம்பல் சபையின் ஸ்தாபிப்பு மற்றும் முழுமையான செயற்பாடு | நலன்புரி நலனோம்பல் சபை 2017 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் இது எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்பட்டிருக்கவில்லை. சபைத் தலைவர் 2019 திசெம்பர் 06 ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்திருந்ததுடன் 2020 மே 26 ஆம் திகதி வரையிலும் புதிய தலைவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | நலன்பெறுனர்களுக்கு குறித்த நலன்கள் பெறப்பட முடியாது போகும். | உடன்படுகின்றோம். அரசாங்க தொழில் முயற்சிகள், அரசுடமையாக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் நியதிச்சட்ட முகவரகங்களின் சபைகளில் இருந்து இராஜினாமா செய்யும் படி, திறைசேரிச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கமைய நலன்புரி நலனோம்பல் சபைத் தலைவர் இராஜினாமாச் செய்திருந்தார். மேலும் நலன்புரி நலனோம்பல் சபைத் தலைவர் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>ஆகவே, புதிய அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரம் கிடைக்கும் வரையில் தலைவரின் பதவி நிரப்பப்படமாட்டாது. | தலைவரை நியமிப்பதற்கும் நலன்புரி நலனோம்பல் சபையின சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு முக்கிய பதவி வகிப்பவர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றைத் தயாரித்தல் | நலன்புரி நலன் திட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நுழைவு மற்றும் வெளியேறலுக்கான ஓர் முறையான கொள்கை | கணக்காய்வுத் திகதியான 2020 மே 26 அன்றும் செயற்திட்டத்தினால் புதிய நலன்புரி நலன்கள் திட்டத்திற்கு பாராளுமன்றத்தினதும் சட்ட வரைஞர் திணைக்களத்தினதும் அங்கீகாரத்தைப் பெற முடியாது போயிருந்தது. | மீளாய்வாண்டின் போது கடன் தவணைப் பணத்தில் யூ.எஸ் டொலர் 2.5 மில்லியன் தொகையை சர்வதேச | 2019 நவம்பர் முதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக பிரமாணம் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | நலன்புரி நலன் திட்டத்திற்கான வர்த்தமானி அங்கீகாரத்திற்காக குறித்த தரப்பினரை அணுகுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகாரமும் வெளியீடும். | | அபிவிருத்திச் சங்கம் விடுவிக்க மாட்டாததுடன் நலன் பெறுனருக்கு குறித்த நலன்கள் கிடைக்கப் பெற மாட்டாது. | | |
| (iii) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றைத் தயாரித்தல் | சமூகப் பதிவுத் தகவல் முறைமை செயற்பாட்டிலும் செயலிலும். | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, சமூகப் பதிவுத் தகவல் முறைமையின் விருத்திக்கான ஒப்பந்தம் தனியார் தரப்பினருக்கு 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி அன்று வழங்கப்பட்டு 2018 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும், 2020 மே 26 ஆம் திகதிய கணக்காய்வுத் தினத்தன்றும் இம் மென்பொருள் விருத்தி நடவடிக்கை பூர்த்தியடைந்திருக்கவில்லை. | ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட வேண்டியதுடன் இது ஒட்டுமொத்தமாக செயற்திட்டத்தின் காலத் திட்டமிடலைப் பாதிக்கும். இதன் விளைவாக சர்வதேச அபிவிருத்திச் சங்கம் மீளாய்வாண்டின் போது யூஎஸ் டொலர் 08 மில்லியன் தொகையை விடுவித்திராதிருந்தது. | சமூகப் பதிவுத் தகவல் முறைமையின் விருத்தி 2019 திசெம்பர் 31 வரையில் பூர்த்தியடைந்திருந்தது. | சமூகப் பதிவுத் தகவல் முறைமை விருத்தி பூர்த்தியடைந்தமைக்கு எவ்வித சான்றுகளும் கிடைக்கப்பெற்றிராமையால் ஒருங்கிணைந்த சமூகப் பதிவேடொன்றைத் தயாரிப்பதற்கு வரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | ஒருங்கிணைந்த சமூக பதிவே | நலன்புரி நலன்கள் திட்டத்தின் கீழான நலன்புரி | சமூக பதிவேட்டு தகவல் முறைமை யின் பூர்த்தியற்ற விருத்தியின் காரணமாகவும் புதிய நலன்புரி நலன் திட்டத்திற்கான | சர்வதேச அபிவிருத்தி சங்கம் யூஎஸ்டொலர் 03 | தரவு இடம்பெயர் செயல்முறை (சமுர்தி, வலது குறைந்த முதியோர் மற்றும் அதனோடிணைந்த) | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | டொன்றைத் தயாரித்தல் | நிகழ்ச்சித்திட்டப் பாதீடு | பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படுவதிலான தாமதத்தினாலும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மில்லியன் தொகையை ஓர் கடன் தவணைப் பணமாக மீளாய்வாண்டின் போது விடுவித்திருக்கவில்லை. | செயற்பாட்டில் உள்ளது. இடம்பெயர்வை உடனடுத்து தரவு செவ்வை பார்த்தல் நடைமுறை இடம்பெறும். சமூக பதிவு முறைமையின் மூலம், தரவுச் செவ்வைத் தேர்வு அளவீட்டுச் சோதனைக்காக 04 மாவட்டச் செயலகப் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தால் அமுவாக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கிட்டிய கண்காணிப்பு தேவைப்படுகின்றது. |
| (v) | ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமை | நலன்புரி நலன் திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டப் பயனாளிகள் குறித்த தற்போதைய தரவுகளுடனான சமூகப் பதிவேடு | சமூகப் பதிவேட்டு தகவல் முறைமையின் நடவடிக்கை விருத்தி பூர்த்தியாகாததன் காரணமாக தரவுப் பதிவு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதத்துடன் பூர்த்தியடைந்திருந்தன. மீளாய்வாண்டின் போது கடன் தவணைப் பணமான யூஎஸ் டொலர் 04 மில்லியன் தொகையை சர்வதேச விருத்தி சங்கம் விடுவிக்கப்படமாட்டாது. | சமூகப் பதிவேட்டில் தகவல் முறைமையின் விருத்தி திசெம்பர் 31 அளவிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. தரவுப் பெயர்வு நடைமுறையில் உள்ளது. | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுவாக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கிட்டிய கண்காணிப்பு தேவைப்படுகின்றது. |
| (vi) | ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறை | நலன்புரி நலன் திட்ட நலன்திட்ட நலனாளிகள் தகுதியான அளவீட்டின் | 2019 ஜுன் 20 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் தகைமை அளீட்டு முறைகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பாராளுமன்றத்தால் இவ் வர்த்தமானியை அங்கீகரித்திருக்கவில்லை.அமு | இதன் விளைவாக பயனாளிகளால் குறித்த நலன்கள் பெறப்படம | பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தமையால் வர்த்தமானி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இத் திருத்தப்பட்ட ஆவணத்தில் இத் தள்ளுபடி இணைப்பு | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுவாக்கப்பட்ட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மை | படி, தகைமை அளவீட்டில் தகுதி பெறுகின்ற னர். | லாக்கமும் அளவீட்டு முறைத் தேர்வும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ாட்டாததுட ன் சர்வதேச அபிவிருத் தி சங்கம் மீளாய்வா ண்டின் போது யூஎஸ் டொலர் 05 மில்லியன் தொகைை ய விடுவித்தி ருக்கவில் லை. | விளைவு இலக்கு மாற்றப்பட்டுள்ளது. | நடவடிக்கைகள் குறித்து கிட்டிய கண்காணிப்பு தேவைப்படுகின் றது. |
| (vii) | ஒன்றி ணைந் த சேவை வ வழங் கல் முறை மை | நிகழ்ச்சித்தி ட்ட விநியோகத் திற்கான ஒருங்கிை ணந்த முகாமைத் துவ தகவல் முறைமை யை பிரதேச செயலகங் கள் பயன்படுத் துகின்றன. | சமூகப் பதிவீட்டுத் தகவல் முறைமை பூர்த்தியடையாததன் காரணமாக இந் நடவடிக்கை 2020 மே 26 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட் ட நடவடிக்கை ககள் கணிசமா ன அளவு காலதாமத த்துடன் பூர்த்தியை டயும். இதன் விளைவா க சர்வதேச அபிவிருத் தி சங்கம் மீளாய்வா ண்டின் போதான கடன் தவைணை ப்பணமான யூஎஸ் டொலர் 06 மில்லியன் தொகைை ய விடுவித்தி ருக்கவில் லை. | 332 பிரதேச செயலகப் பிரிவுகளில் 92 பிரதேச செயலகப் பிரிவுகள் தொழிநுட்பப் பயிற்சியை பூர்த்திசெய்திருந்தன. 184 நலன்புரி நலன் தகவல் பிரிவு உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். கோவிட் தொற்றின் காரணமாக மிகுதிப் பயிற்சி நடவடிக்கைகள் பிற்கோடப்பட்டிருந்தன. | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவூட்டுவதற்க ான நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்திட்டத்தா ல் அமுவாக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கிட்டிய கண்காணிப்பு தேவைப்படுகின் றது. |

**3.2. ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு மூலோபாய மற்றும் இலங்கைக்கான தேசிய சமூக பாதுகாப்பு மூலோபாயத்தை மேம்படுத்துவதற்காக விரிவான மதிப்பீட்டை நடாத்துவதற்கான ஒப்பந்தம் ஓர் உசாவுகை நிறுவகத்திற்கு ரூபா 141 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் 2019 சனவரி 22 ஆம் திகதியன்று வழங்கப்பட்டு இது 2019 செப்தெம்பர் 01 ஆம் திகதியளவில் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 2020 மே 26 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியின் போதும் இது பூர்த்தியடைந்திருக்கவில்லை. எவ்வாறெனினும், ரூபா 1.46 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் உசாவுகை நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | நலன்பெறுனர்களுக்கு குறித்த நலன்கள் பெறப்பட முடியாது போகும். | உடன்படுகின்றோம். பல்வேறு காரணங்களால் தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயத்தின் வளர்ச்சி தாமதமானது. எனினும் ஒப்பந்தத் தொகை ரூபா 14.1 மில்லியன் தொகையாகச் சீராக்கப்பட வேண்டும். மல்டி டெக் சொல்யூஷன்ஸ் இனால் வழங்கப்பட்ட வரைவு மதிப்பீட்டு அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு நான்கு மாதங்களுக்கு மேலாயிற்று. தேசிய திட்டமிடல் திணைக்களம் இடைவெளிகளை இனங்கண்டுள்ளதுடன் பொது மன்றத்தில் ஆலோசகர் மற்றும் மீளாய்வுக் குழுவுடன் உடனடியாக கருத்துக்கள் கலந்துரையாடப்பட உள்ளன. | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு நடவடிக்கைகளை வரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சமூக பதிவேட்டுத் தகவல் முறைமைக்கான வியாபாரச் சமூக மற்றும் பேரழிவு மீட்புத் திட்டத் தயாரிப்பிற்கான ஒப்பந்தம் ஓர் தனிப்பட்ட ஆலோசகருக்கு ரூபா 6.25 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, அறிக்கை 2019 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், 05 மாத கால தாமதத்தை அடுத்து 2019 யூலை 08 ஆம் திகதியே அறிக்கை | குறித்த நலன்கள் எய்தப்படமாட்டாது. | உடன்படுகின்றோம். 2019 யூலை 09 ஆம் திகதியளவில் அறிக்கை வழங்கப்பட்டு 2019 யூலை 24 அளவில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

சமூக பதிவேட்டுத் தகவல் முறைமை விருத்தி பூர்த்தி செய்யப்பட்டிராத போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 4.36 மில்லியன் ஆலோசகருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 கள ஆய்வின் போதான அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | கொழும்பு பிரதேச செயலகங்களில் கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட தளக் கணக்காய்வின் போது சமூக தகவல் பதிவு முறைமையின் குறித்த பயிற்சியைப் பெற்ற பெரும்பாலான அதிகாரிகள் வேறு திணைக்களங்களுக்கும் அமைச்சுக்களுக்கும் மாற்றப்பட்டிருந்தமையால் ரூபா 1.7 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிநுட்பபட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பயனற்றுப் போயிருந்தது. | செலவின விரயம் | செயற்திட்ட தொழிநுட்பக் குழுவில் சமூக பதிவுத் தகவல் அமைப்பை நிர்வகிக்க டபிள்யூபீஜயூ இற்காக அர்ப்பணிப்புமிக்க அதிகாரிகளை நியமிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. ஓர் நிலையான தீர்வைக் காண்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிட வேண்டும் |

### 3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| | கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | தகவல் மற்றும் சமூக தொழிநுட்ப முகவரகத்தினூடாக ரூபா 29 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 332 மடிக்கணனிகள் சமூக பதிவுத் தகவல் முறைமை பூர்த்தியடைந்திராமையால் குறித்த நோக்கத்திற்காகப் | (அ) ஏனைய நோக்கங்களுக்காக மடிக்கணனிகள் பயன்படுத்தப்படும் இயலுமை உள்ளது.<br><br>(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்த | மடிக்கணனிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகிப்பதற்காகச் செயற்திட்டத்தின் ஈடுபாடு பூச்சியமாகும். சமூக பதிவுத் தகவல் முறைமை விருத்தி செய்வதறகாகவும் பிரதேச செயலகங்களுக்குத் தேவையான மூலவளங்களை | பிரதேச செயலகங்களுடன் முறையான ஒருங்கிணைப்பைப் பேணல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இவை பயன்படுத்தப்படாத நிலையில் மேற்குறித்த கணனிகளின் உத்தரவாத காலம் காலாவதியாகியிருந்தமை கண்டறியப்பட்டது. | நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாதிருந்தன. | வழங்குவதற்காகவும் நிதி அமைச்சால் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 332 மடிக்கணனிகளை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரகம் பிரதேச செயலகங்களின் மட்டத்தில் வழங்கியிருந்தது. இம் மடிக்கணனிகள் உத்தரவாத கால விபரங்களுடன் பிரதேச செயலாளர்களின் பொறுப்பில் உள்ளன. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தால் நடாத்தப்படும் பயிற்சி அமர்வுகளின் போது இம் மடிக்கணனிகள் டபிள்யூபீஐயூ உடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர்களுக்கு ஒப்படைத்த மடிக்கணனிகள் தொடர்பில் ஓர் பதிவேட்டை நாம் பேணுகின்றோம். | |
| (ii) | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டில் குறித்த நிதியீட்டு இலக்குகளின் படி, மீளாய்வாண்டின் போது ரூபா 5622.78 மில்லியன் தொகைக்குச் சமனான யூஎஸ் டொலர் 31 மில்லியன் வழங்கப்பட எதிர்பார்க்கப்பட்ட போதிலும் குறித்த இலக்கில் ரூபா 457.95 மில்லியன் தொகைக்குச் சமனான யூஎஸ் டொலர் 2.5 மில்லியன் அல்லது 08 சதவீதம் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தப்பட்டிருந்தது. | சேயற்திட்டக் காலப்பகுதியின் போது மொத்த ஒதுக்கீட்டு நிதியும் பயன்படுத்தப்பட முடியாது. | 2020 மார்ச் மற்றும் மே மாதங்களில் முறையே யூஎஸ் டொலர் 5 மில்லியுன் தொகையும் யூஎஸ் டொலர் 45 மில்லியன் தொகையும் பெறப்பட்டதுடன் 72% திரண்ட முன்னேற்றத்தை விளைவித்தது. | சேயற்திட்ட மதிப்பீட்டுக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட இலக்குகள் பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 331 டிஜிடல் மல்டி பங்ஷன் போட்டோ பிரதி இயந்திரங்களின் வழங்குதல், நிறுவுதல், ஸ்தாபித்தல், சோதனையிடல் மற்றும் பயிற்சியளித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு தகவல் பிரிவுகளிற்கான 356 மடிக் கணனிகளின் சோதனைகளின் கொள்முதல் மீளாய்வாண்டின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்தன, | இது எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட முடிவுகளையும் விளைவுகளையும் பாதிக்கும். | பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் உபகரணம் ஒன்லைனில் இயந்திரம் இயக்கப்பட இருந்தது. சமூக பதிவு தகவல் முறைமையின் ஸ்தாபிப்பில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக செயற்திட்ட வழிநடத்தல் குழுவால் இக் கொள்முதலை இடைநிறுத்தி வைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள்

| முக்கிய பதவியணி நிலை | செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவில் கடமையாற்றிய காலம் | ஏனைய நிறுவகங்களில் மேற்கொள்ளப்படும் பணி | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| செயற்திட்டப் பணிப்பாளர் | 2018 மே மாதத்தில் இருந்து இந்நாள் வரை | மொழிசார் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவகம் | செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பாதிப்படையும். | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் தலைவர் பதவி நிரந்தரமற்றதாகும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

### 3.7 மனித மூலவள முகாமைத்துவம் தொடர்பான பிரச்சனைகள்

| புதவிநிலை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | உள்ளபடியானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | |
| சமூகப் பாதுகாப்பு இயலளவு விருத்தி முகாமையாளர் | 01 | 0 | 01 | (அ) செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டு கண்காணிக்கப்பட முடியாது.<br><br>(ஆ) முக்கியமான 07 பதவிகளின் வெற்றிடம் நிரப்பப்படுவதற்கு தவறியமையால் செயற்திட்டச் செயற்பாடுகள் பாதிப்படையும். | விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகள் தேர்வுப் பிரமாணங்களிற்கு அமைய நடாத்தப்பட்டன. | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாடுகளைத் தொடர்வதற்கு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி, பதவியணி அங்கத்தவர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டும். |
| தகவல் தொழிநுட்ப முகாமையாளர் | 01 | 0 | 01 | | 2020 சனவரியில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார் | |
| சமூகப் பாதுகாப்பு இயலளவு விருத்தி உத்தியோகத்தர் | 01 | 0 | 01 | | விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகள் தேர்வுப் பிரமாணங்களிற்கு அமைய நடாத்தப்பட்டன. | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 0 | 01 | | 2020 மார்ச்சில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார் | |
| தொடர்பாடல் உத்தியோகத்தர் | 01 | 0 | 01 | | 2020 மார்ச்சில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | |
| சாரதி | 04 | 02 | 02 | | இரு சாரதிகள் போதுமானதுடன் பதவியணி சீராக்கப்பட வேண்டும். | |
| **மொத்தம்** | **09** | **02** | **07** | | | |

| கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டப் பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டு ரூபா 3.97 மில்லியன் 2018 யூன் முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான சம்பளமாக வளங்கப்பட்டிருந்தது இவர் முன்பு கடமையாற்றிய தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகாது இதே காலப்பகுதிக்காக ரூபா 1.79 மில்லியன் தொகையைச் சம்பளமாகப் பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடு பாரியளவில் தாக்கமடைந்திருந்தது. | செயற்திட்டப் பணிப்பாளர் முழு நேர அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2019 பந்தி 2.2.4 இன் அடிப்படையில் அமைச்சரவைப்பத்திரத் தீர்மானத்தின் படி நியமிக்கப்பட்டிருந்தார். 2019 மே 23 முதல் இவருக்கான கால நீடிப்பும் 2019 யூலை 19 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் (என்ஐஎல்ஈரீ) தலைவருக்கான நியமனம் பீஈடீ சுற்றறிக்கை 03/2015 இன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு அவர் படிப்பணத்திற்காகவும் உரித்துடையவராவார்.<br><br>செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் தலைவரிற்கான கொடுப்பனவு தொடர்பாக இரு வேறு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>ஒரு கடிதம் செயற்திட்டப் பணிப்பாளரால் அரச முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 யூலை 31 ஆம் திகதியன்று இரு பதவிகளுக்கான கொடுப்பனவுகளின் பணப்பெறுவனவு குறித்து ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கடிதம் தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரச முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2019 செப்தெம்பர் 23 ஆம் திகதி இவ் விடயம் குறித்து விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டது. இது வரையில் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

எவ்வித பதில்களும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. ஆகவே, முகாமைத்துவச் சுற்றறிக்கை இல. 01/2019 இன் அடிப்படையில் செயற்திட்டப் பணிப்பாளருக்கான கொடுப்பனவை இலங்கை அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட அவரது நியமனம் மற்றும் நீடிப்பைப் பின்பற்றி நாம் மேற்கொண்டுள்ளோம்.